# UNIVERSITY OF PERADENIYA

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

**தொடர் தொலைக்கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்**

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - පැරණි නිර්දේශය) පරීක්ෂණය - 2020

**பொதுக்கலைத் தேர்வு (வெளிவாரி – பழைய பாடத்திட்டம்) - 2020**

**Bachelor of Arts (External - Old Syllabus) Examination - 2020**

***PGH II – ஒழுக்கவியல்***

කාලය පැය(03) තුනයි.
மூன்று(03) மணித்தியாலங்கள்
Time three (03) Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න 5 පිළිතුරු සපයන්න.
5 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
Answer 5 questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 5 කි.
இந்த வினாப்பத்திரத்தில் 5 வினாக்கள் உள்ளன.
There are 5 questions in the question paper.

---

1. ஒழுக்கவியலின் விடயப் பொருளை (Subject Matter) சுருக்கமாக அறிமுகம் செய்து ஒழுக்க மெய்யியலாளர்கள் தீர்ப்பதற்கு முயலும் ஒழுக்கவியல் பிரச்சினைகளின் இயல்பினைத் தெளிவுபடுத்துக.

2. நான் எதை சரியென்று நினைக்கின்றேனோ அது எனக்கு சரி. நீ எதைச் சரியென நினைக்கிறாயோ அது உனக்குச் சரி என்று தனிநபர் உணர்ச்சிகள் வழியாகத்தான் ஒழுக்கத்தை சோபிஸ்டுகள் அடையாளம் கண்டனர் என்று கூறுவது சரியா?ஆராய்க.

3. ஒன்றில்
   சோக்கிரடீஸின் ஒழுக்கவியலின் பிரதான பண்புகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

   அல்லது
   பிளேட்டோவின் ஒழுக்கவியல் கண்ணோக்கினை விமர்சன ரீதியில் பரிசீலிக்குக.

4. ‘நன்மை விபரிக்க முடியாதது’ இதனை உதாரணமாகக் கொண்டு G.E. மூவரின் ஒழுக்கவியல் பகுப்பாய்வை ஆராய்க.

5. ‘தண்டணை’ என்ற பதத்தை எவ்வாறு நீர் விளக்குவீர்? தண்டனையின் பிரதான கோட்பாடுகளைச் சுருக்கமாகப் பரிசீலிக்குக.

6. ‘இன்பவாதம்’ என்ற பதத்தை விளக்கி ஒழுக்கவியல் பற்றிய பயன்வழிவாதிகளின் கருத்துக்களை ஆராய்க.

7. ஒழுக்கப் பெறுமதியுள்ள செயல்களைப் பற்றிய காண்டின் கருத்துக்கள் என்ன?

8. ஒழுக்கத் தீர்மானங்கள் பற்றிய தர்க்கப் புலனெறிவாதிகளின் பகுப்பாய்வினை விளக்கி விமர்சன ரீதியில் ஆராய்க.

9. பௌத்த ஒழுக்கவியலில் நீர் காணும் தனித்துவமான பண்புகள் எவை?

10. பின்வருவனவற்றுள் ஏதேனும் <u>இரண்டினைப்</u> பற்றிச் சுருக்கமாக கருத்துரை தருக.
    i. நியம மற்றும் விபரிப்பு ஒழுக்கவியல்
    ii. ஒழுக்கவியல் மீதான மார்க்ஸியவாதிகளின் கண்ணோக்கு
    iii. சுயவிருப்பத் தீர்மான (Free will) எண்ணக்கரு
    iv. சமயமும் ஒழுக்கவியலும்
    v. ஒழுக்கவியலும் வைத்தியத் தொழிலும்